பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் அவர்களுடைய துயரத்தில் தானும் பங்கு கொள்வதாகத் தெரிவித்துள்ளார்கள். மேலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் மற்ற குழந்தைகள் அனைவரும் விரைவில் பூரண குணம் அடைய தனது பேராவலை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விபத்தில் மரணம் அடைந்த இரண்டு ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு தலா 25,000 ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

அதேபோல 7 பள்ளிக் குழந்தைகளின் குடும்பங்களுக்கும் தலா 10,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்கவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் மருத்துவச் செலவிற்காக 5,000 ரூபாயும், 2,500 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்;

5. கவன ஈர்ப்பு

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் சோத்துப்பாறை அணைத் திட்டப்பணி நடைபெறாததால் மக்களின் கவலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாயந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். பெரியவீரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம். பெரியவீரன்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் பெரியகுளம் வராக அணை திட்டத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் சோத்துப்பாறை அணைத்திட்டம் பகுதிப் பணி முடிந்தும் முடியாத நிலையில் உள்ளதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே இருப்பதை அப்படியே படிக்க வேண்டும். அப்படியே படியுங்கள்.

திரு. எம்.பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை மாவட்டம் பெரியகுளம் சோத்துப்பாறை அணைத் திட்டப் பணி நடைபெறாமல் நிலுவையில் உள்ளதால் அப்பகுதி மக்களின் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பெரியவீரன் அவர்கள் தெரிவித்துள்ளதைப் போல் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் நிறுத்தப்படவில்லை.

இத்திட்டத்திற்கு 6,7,8 பகுதிகளில் (Block) உள்ள பணிகளுக்கு ரூ. 90.00 லட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் மீதமுள்ள பணிகளை ரூ.25 கோடி மதிப்பீட்டில் செய்து முடிப்பதற்காக ஒப்பந்த ஆவணங்கள் உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்படவுள்ளன. உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் (Agency) முடிவு செய்யப்பட்டு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.பெரியவீரன், கேள்வி கேளுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம் சோத்துப்பாறை அணைத் திட்டம் 1982-ஆம் ஆண்டு திட்டம் தீட்டப்பட்டு 1984-ஆம் ஆண்டு திட்டப்பணிகள் துவக்கப்பட்டு பகுதிப் பணிகள் முடிவடைந்து பகுதிப் பணிகள் முடிவடையாத நிலையிலே இருப்பது குறித்து நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். அந்தத்

திட்டத்தினுடைய செயல்களை இங்கு விளக்கிக் கூறியுள்ளார். அந்தத் திட்டம் 1984-ஆம் ஆண்டு மொத்தத்திலே 90 இலட்சம் திட்ட மதிப்பாக செயல்படுத்தி இன்று அந்தப் பணிகள் முடிவடைவதற்கு இன்னும் கூடுதலாக செலவினங்கள் ரு. 25 கோடி கொடுத்தும்கூட அந்தப் பணிகளை எடுத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இரண்டு மலைகளையும் இணைக்கக்கூடிய அந்த டேம்-பாறை ரொம்ப இளக்கமாக இருப்பதால் அதை கூடுதலான செலவுத் திட்டத்திலே அந்தப் பணிகள் செய்யப்பட்டு மற்றும் அந்தச் செயற்குறிப்பு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி மாதிரி கேளுங்கள். (குறுக்கீடு) என்ன செய்யவேண்டும் என்று கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்வார்.

திரு. எம். பெரியவீரன்: தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை செய்து முடிப்பதற்கு திட்டங்கள் தீட்டியும்கூட பணிகள் செய்து முடிக்க முடியாத நிலைமையில் உள்ளதால் அதுகுறித்து அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோத்துப்பாறை அணை நீர்த்தேக்க திட்டப் பணிகளை பொறுத்தமட்டில் நம்முடைய அரசு வந்ததற்குப் பின்னர்தான் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு 6,7,8 ப்ளாக்குகளில் உள்ள பணிகளுக்கு 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்து பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன. இதற்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய்க்கு உலக வங்கித் திட்டத்தின் கீழே நாம் இந்த திட்டத்தை எடுத்திருக்கிறோம். இந்த ஒப்பந்தப் புள்ளிகளை எல்லாம் நாம் வரைவு செய்து வேர்ல்டு பாங்க் அப்ரூவலுக்காக அனுப்பியுள்ளோம். இந்த 25 கோடிக்கு ஒப்புதல் அவர்கள் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். டபிள்யூ. ஆர்.சி.பி. ஸ்கீமிலே அதைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே அந்த ஒப்பந்தப் புள்ளிகளுக்கு உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டவுடனேயே டெண்டர் கோரப்பட்டு உடனடியாக அந்தப் பணிகள் முடிக்கப்படும். சோத்துப்பாறை அணைத் திட்டம் நிச்சயமாக நம்முடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

திரு.எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மதுரை மாவட்டத்திற்கு ஒரு சிறப்பு வாய்ந்த திட்டம் ஆகும். அதை நிரந்தரமாக கொடைக்கானல் பகுதியிலிருந்து பேரிச்சம்

[திரு. எம். பெரியவீரன்] [1996 பிப்ரவரி 28

ஆற்று தண்ணீரை இடைமறித்து அதை தேக்கி வைத்து அந்தப் பகுதியினுடைய தரிசு நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றுவது மட்டுமல்லாமல் மதுரைக்கு கீழ் பக்கம் இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மாவட்டத்திற்கும் கூட சேர்த்து அந்தத் தண்ணீர் பயன்படக்கூடிய அளவுக்கு அதிகபட்சம் அந்த வரத்து இருப்பதால் விரைவில் அந்தப் பணிகளை முடித்தால் மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் செழுமையான பகுதிகளாக மாறுவதற்கு நல்ல நிலையிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கிய பணம் போதாது என்று அங்குள்ள செயற்பொறியாளர் மற்றும் அந்த ஒப்பந்தக்காரர்கள் என்னிடத்தில் எடுத்துக் கூறினார்கள். அந்த இடுபொருள்கள் எல்லாம் வெளியிலிருந்து கொண்டு வந்து வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதால் திட்டத்தினுடைய மதிப்பீட்டை இன்னும்கூட்டி அந்தப் பணியை விரைவுபடுத்தி முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோத்துப்பாறை திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கொஞ்சம் கடுமையான பிரச்சினைகள் ஏற்பட்டது உண்மைதான். ஏன் என்று சொன்னால் அந்தப் பகுதியில் போய் வேலை பார்ப்பதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராமல் கூட இருக்கின்ற சூழ்நிலை இருந்தது. நிதி ஒதுக்கீட்டிலும் கூட அதில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. ஆனால் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றவேண்டும் என்று பொதுப் பணித்துறைக்கு ஆணையிட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு உலக வங்கியினுடைய ஒப்புதலோடு செய்ய இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது. உலக வங்கியினுடைய ஒப்புதல கிடைத்து விட்டது. ஆகவே நிதி ஆதாரங்களைப் பற்றி பிரச்சினை இல்லை. டபிள்யூ.ஆர். சி.பி. ஸ்கீமில் சேர்த்து இருக்கிறோம். அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளின் அந்த வரைவுகளை எல்லாம் தயார் செய்து இருக்கிறோம். அதற்கு அப்ரூவல் பெறவேண்டும். அந்த ஒப்பந்தப்புள்ளிகள் உலக வங்கியினுடைய அந்த கண்டிஷன்கள் படி அவர்களிடமிருந்து அனுமதி பெற்று தான் டெண்டர் வைக்கவேண்டும். அந்த அனுமதியைப் பெறுவதற்காக நாங்கள் ஏற்பாடு செய்து இருக்கிறோம். அனுமதி கிடைத்துவிடும். இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டைப் பற்றி கவலையே கிடையாது. நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம். நிச்சயமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆகவே பணி வெகு விரைவில் தொடங்கும். புரசீஜர் இருக்கிறது. ஒரு

திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு அந்த நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே தான் இப்போது அந்த ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விதமான கவலையும் அடைய வேண்டியது இல்லை. நிச்சயமாக அந்தத் திட்டம் நிறைவேறும். நிறைவேற்றியே தீருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று பாசனக் கோட்டங்கள் இரண்டாகக் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆ. பாலையா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆ. பாலையா.

**திரு. ஆ. பாலையா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைமுறையில் இருந்த மூன்று பாசனக் கோட்டங்கள் 19-1-1996-ஆம் நாளிட்ட அரசாணையின் விளைவாக இரண்டாகக் குறைக்கப்பட்டதால் கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொன்ன பிறகு நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. பாலையா: "....கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசனப் பராமரிப்புக்கு கன்னியாகுமரி கோட்டம், நாகர்கோவிலில் இருந்து வருகிறது. இப்போதும் இந்த கோட்டம் நீர்வள அமைப்பின் கீழ்ப்பாசனபராமரிப்பு கோட்டமாகவே இருக்கின்றது.